ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருக்காட்கரை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருக்காட்கரை

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் |
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் || **1** ||

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் |
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் || **2** ||

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் |
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் || **3** ||

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு’ணாய மேநே |
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே || **4** ||

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் |
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா || **5** ||

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் |
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் || **6** ||

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## திருவாய்மொழி – உருகுமால்

‡ உருகுமால் நெஞ்சம் ⋆
உயிரின் பரம் அன்றி ⋆
பெருகுமால் வேட்கையும் ⋆
என் செய்கேன் தொண்டனேன் ⋆
தெருவெல்லாம் காவி கமழ் ⋆
திருக்காட்கரை ⋆
மருவிய மாயன் தன் ⋆
மாயம் நினைதொறே ‖ **9.6.1** ‖

நினைதொறும் சொல்லுந்தொறும் ⋆
நெஞ்சிடிந்துகும் ⋆
வினை கொள் சீர் பாடிலும் ⋆
வேம் எனதார் உயிர் ⋆
சுனை கொள் பூஞ்சோலைத் ⋆
தென் காட்கரை என்னப்பா ⋆
நினைகிலேன் நான் ⋆
உனக்காட்செய்யும் நீர்மையே ‖ **9.6.2** ‖

நீர்மையால் நெஞ்சம் ⋆
வஞ்சித்துப் புகுந்து ⋆
என்னை ஈர்மைசெய்து ⋆
என் உயிராய் என் உயிர் உண்டான் ⋆
சீர் மல்கு சோலைத் ⋆
தென் காட்கரை என்னப்பன் ⋆
கார் முகில் வண்ணன் தன் ⋆
கள்வம் அறிகிலேன் ॥ **9.6.3** ॥

அறிகிலேன் தன்னுள் ⋆
அனைத்துலகம் நிற்க ⋆
நெறிமையால் தானும் ⋆
அவற்றுள் நிற்கும் பிரான் ⋆
வெறி கமழ் சோலைத் ⋆
தென் காட்கரை என்னப்பன் ⋆
சிறியவென் ஆர் உயிர் உண்ட ⋆
திருவருளே ॥ **9.6.4** ॥

திருவருள் செய்பவன் போல ⋆
என்னுள் புகுந்து ⋆
உருவமும் ஆர் உயிரும் ⋆
உடனே உண்டான் ⋆
திருவளர் சோலைத் ⋆
தென் காட்கரை என்னப்பன் ⋆
கரு வளர் மேனி ⋆
நம் கண்ணன் கள்வங்களே ॥ **9.6.5** ॥

என் கண்ணன் கள்வம் ⋆
எனக்குச் செம்மாய் நிற்கும் ⋆
அங்கண்ணன் உண்ட ⋆
என் ஆர் உயிர்க்கோதிது ⋆
புன் கண்மை எய்திப் ⋆
புலம்பி இராப் பகல் ⋆
என் கண்ணன் என்று ⋆
அவன் காட்கரை ஏத்துமே ‖ **9.6.6** ‖

காட்கரை ஏத்தும் ⋆
அதனுள் கண்ணா என்னும் ⋆
வேட்கை நோய் கூர ⋆
நினைந்து கரைந்துகும் ⋆
ஆட்கொள்வான் ஒத்து ⋆
என் உயிர் உண்ட மாயனால் ⋆
கோள் குறை பட்டது ⋆
என் ஆர் உயிர் கோள் உண்டே ‖ **9.6.7** ‖

கோள் உண்டான் அன்றி வந்து ⋆
என் உயிர் தான் உண்டான் ⋆
நாளு நாள் வந்து ⋆
என்னை முற்றவும் தான் உண்டான் ⋆
காள நீர் மேகத் ⋆
தென் காட்கரை என் அப்பற்கு ⋆
ஆள் அன்றே பட்டது ⋆
என் ஆர் உயிர் பட்டதே ‖ **9.6.8** ‖

ஆர் உயிர் பட்டது ⋆
எனதுயிர் பட்டது ⋆
பேர் இதழ்த் தாமரைக் கண் ⋆
கனி வாயதோர் ⋆
கார் எழில் மேகத் ⋆
தென் காட்கரை கோயில் கொள் ⋆
சீர் எழில் நால் தடந்தோள் ⋆
தெய்வ வாரிக்கே ॥ **9.6.9** ॥

வாரிக்கொண்டு ⋆
உன்னை விழுங்குவன் காணில் என்று ⋆
ஆர்வுற்ற என்னை ஒழிய ⋆
என்னின் முன்னம் பாரித்து ⋆
தான் என்னை ⋆
முற்றப் பருகினான் ⋆
கார் ஒக்கும் ⋆
காட்கரை அப்பன் கடியனே ॥ **9.6.10** ॥

‡ கடியனாய்க் ⋆
கஞ்சனைக் கொன்ற பிரான் தன்னை ⋆
கொடி மதிள் தென் குருகூர்ச் ⋆
சடகோபன் சொல் ⋆
வடிவமை ஆயிரத்து ⋆
இப்பத்தினால் சன்மம் முடிவெய்தி ⋆
நாசம் கண்டீர்கள் எங்கானலே ॥ **9.6.11** ॥

திரு பெருஞ்செல்வநாயகி சமேத காட்கரையப்பன் திருவடிகளே சரணம்